தரத்தில் சிறந்த
முயல், வரிக்குதிரை
விளக்கு,
செவன மார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

★ பக்கங்கள் 8 விலை சதம்40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice,
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 5 நம்மிமான் 27 இதழ் 190
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21-8-79

New Cambridge
Tutorrial Institutes
Thirunelvely Junction.
நடைபெறுகின்றது. G C E. (A/L)
கணக்கியல்: பாலசுப்பிரமணியம்
(பாலா மாஸ்ரர்)
புவியியல்: பிரபல நூல் ஆசிரியர்
பொருளியல்: குமாரி தம்பையா
வர்த்தகம்: வாமதேவன்
Short Hand Typing: தனலக்ஷ்மி
1-9-79-இல் ஆரம்பம்.
Spoken English By New Method
4 Months Course
புதிய மாணவர்கள்
சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்
நிர்வாகி :
V. M. PAKKIANATHAN

# அமரர் என். எம்.

## ஜோதியாக சங்கமம்

### இளம் சிறுர்கள் செந்நிற மலர்தூவ; கட்சியினர் புரட்சிக்கீதம் பாட, சிதைக்கு மருமக்கள் தீவைத்தனர்

(கொழும்பு)

**சுதந்திரப்போராட்ட வீரர் அமரர் கலாநிதி என். எம். பெரேராவின் பூதவுடல், நேற்று இரவு சரியாக ஏழு மணி எட்டு நிமிட நேரத்தில், சமதர்மபூமியாகக் காட்சியளித்த சுதந்திர சதுக்கத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் மைதானத்தில், தகனம் செய்யப்பட்டது.**

மறைந்த தலைவரின் பூதவுடலுக்கு இளம் சிறுர்களும் சிறுமிகளும் செந்நிற மலர்களைத் தூவி அஞ்சலி செலுத்த, லங்காசமசமாஜக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள் கட்சிக்கீதத்தைப்பாடி வீர வணக்கம் செலுத்த, அமரர் என்.எம்.மின் மருமகன்மார் இருவரும் சிதைக்கு தீவைக்க, அந்த மார்க்ஸியத் தலைவன்-இந்தநாட்டைக் கட்டிஎழுப்ப தன்னையே அர்ப்பணித்த ஒருதேசியத் தலைவன்-என்.எம்.மின் பூதவுடல், ஜெகஜோதியாக-செந்நிறமாக சங்கமித்தது.

நேற்றுப் பிற்பகல் 1-45க்கு பாராளுமன்றத்திலிருந்து புறப்பட்ட என். எம். மின் இறுதி ஊர்வலம் சரியாக மாலை நான்கு மணிக்கு, சுதந்திரச் சதுக்கத்திலுள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் மைதானத்தை வந்தடைந்தபோதிலும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் இந்த மைதானத்தை வந்தடைய இரவு ஏழு மணியாகிவிட்டது.

மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த அரசியல் வேறுபாடுகளைத் துறந்து பல துறைப் பிரிவினரும் சுதந்திர சதுக்கத்திலும், விளையாட்டுத் துறை மைதானத்திலுமிருந்தனர். இப்பகுதி ஒரு சமதர்ம பூமியாகவே காட்சி அளித்தது.

மூவாயிரத்துக்கும் அதிகமான பௌத்த குருமார்கள் தலைவரின் இறுதி அஞ்சலியைச் செலுத்தவந்திருந்தாலும் பலர் இருக்க இடமின்றி நின்றனர்

மைதானத்தைச் சுற்றியும், சுதந்திரசதுக்கத்திலும், இதனைச் சுற்றியுள்ள கட்டிடங்களிலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர். சிறுவர்கள், சிறுமிகள், மாணவர்கள், பெண்கள், வயோதிபர் என்றும், பல்வேறு அரசியல், சமூகஇயக்கங்களைச் சேர்ந்தவர் என்றும் காட்சிகொடுத்தனர். பலர் செந்நிற உடைகளையே அணிந்திருந்தனர்.

பூதவுடல் மைதானத்துக்கு வந்துசேர்ந்ததும் அரசியல், மதத் தலைவர்கள் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

[8ம் பக்கம் பார்க்க]

# சரண்சிங் ராஜிநாமா?

## மாற்று அரசுக்கு 'ராம்' தயார்

(புதுடில்லி)

இருபத்திநான்கு நாட்கள் பதவிவகித்த சரண்சிங் அரசாங்கம் நேற்றுக் காலை ராஜிநாமாச்செய்துகொண்டதைத் தொடர்ந்து மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதா அல்லது இடைக்காலத் தேர்தலை நடத்துவதா என்பது குறித்து ராஷ்டிரபதி திரு, நீலன் சஞ்சீவரெட்டி கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திவருகின்றார்.



இந்திய லோகசபையில் சரண்சிங் அரசு மீது நம்பிக்கைப் பிரேரணை நேற்றுத் தாக்கலாகி வாக்கெடுப்பு நடைபெறும் என்று எதிர் பார்க்கப்பட்ட அதேநேரத்தில் சரியாக நேற்றுக் காலை 10-45க்கு பிரதமர் திரு. சரண்சிங் தமது அமைச்சரவையின் ராஜிநாமாவை பாரத ராஷ்டிரபதியிடம் சமர்ப்பித்தார்.

இதன் பின்னர் அவர் நிருபர்களுக்களித்த பேட்டியில் லோகசபையைக் கலைத்துவிட்டு, இடைக்காலத்தேர்தலுக்கு உத்தரவிடுமாறு தாம் ராஷ்டிரபதிக்கு யோசனை கூறியிருப்பதாகக் கூறினார்.

பிரதமர் சரண்சிங் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்த ஒருமணிநேரத்தில் ஜனதா கட்சித் தலைவர் திரு ஜெகஜீவன்ராம், ராஷ்டிரபதியைச் சந்தித்து. தம்மால் அரசாங்கம் அமைக்கமுடியும் என்றும் இதற்கான உரிமையைத் தமக்கு தருமாறும் கோரினார்.

இதனைத் தொடர்ந்து திருமதி இந்திராகாந்தியும் ராஷ்டிரபதியைச் சந்தித்து சுமார் அரைமணிநேரம் வரை ஆலோசனை நடத்தினார்.

(8-ம் பக்கம் பார்க்க

இறக்குமதி செய்யப்பட்ட
சகலவிதமான எசன்ஸ்
வகைகளுக்கும்
கலர் பவுடர் தினிசுகளுக்கும்
-புஸ்பா ரேட்ஸ்-

இன்று தேரில் பவனிவரும் நல்லைக் கந்தன்
அடியார்களுக்கு நல்லருள் பாலிக்க
வேண்டுகிறோம்.

இறக்குமதி செய்யப்பட்ட கோடியல்
வகைகளுக்கும், கோடியல், குளிர்
பானத் தயாரிப்பாளர்களுக்குத்
தேவையான மூலப் பொருட்களுக்கு
-புஸ்பா ரேட்ஸ்-

புஸ்பா ரேட்ஸ்
(எசன்ஸ் ஹவுஸ்)

பேக்கரிக்காரர்கள், ஐஸ்கிரீம்
தயாரிப்பாளர்கள், ஹோட்டல்
களுக்குத் தேவையான சகல
பொருட்களுக்கும்
-புஸ்பா ரேட்ஸ்-

11/4 ஸ்ரான்லி வீதி,
மொம்சாக் பில்டிங்,
யாழ்ப்பாணம்.

133, டாம் வீதி,
சிற்றிமிஷன் பில்டிங்,
கொழும்பு-12.
தொலைபேசி : 36293

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த
ரக கோடியல், ஜாம், இறக்குமதி
செய்யப்பட்ட பிஸ்கட் வகைகளை
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
-புஸ்பா ரேட்ஸ்-

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தறித்த வேப்பமரமும் தறிக்காத வேப்பமரமும் விற்பனைக்கு உண்டு 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3351

சிகிக் குளிர் சாதனம், வீட்டுத் தளபாடங்கள். இல 16, டேவிட் ரோட், யாழ்ப்பாணம். 3353

வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் கோவில் வளவோடு, மாவித்தியாலயத்தின் அருகே வீதியோரம் உள்ள 2 பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. விபரத்துக்கு: தேவரட்னம், 14, கொய்யாத் தோட்டம் புது வீதி, யாழ்ப்பாணம். 3355

நாவலடி அரியாலை வீதியில் கண்டி ரோட்டிலிருந்து ¼ மைல் தூரத்தில் (15) பரப்பு தென்னங்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. குடியிருப்பதற்கு வசதியான இடம். பஸ் போக்குவரத்து இருக்கிறது. R. கோபாலஇரத்தினம், சட்டத்தரணி, 125, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. 3313

### தேவை

இரண்டு, இரண்டரைப் பரப்பில், அண்மையில் கட்டப்பட்ட வீடு அல்லது வீடு கட்டக்கூடிய வெற்றுக் காணி, சகல வசதிகளுடன் உடுவில், திருநெல்வேலி, இணுவில், மருதனுமடம், நல்லூர், சுண்டிக்குளி பகுதிகளில் விலைக்குத் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: பெட்டி இல: 3315, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3315

### சோதிடம்

குருபகவான் கற்கடகத்திலிருந்து 22-8-1979ல் (நாழிகை 46-02) சிம்மராசிக்கு மாறுகிறார். உங்களுக்கு நல்லதா, தீமையாவென்பதையறிய ரூ. 3/- அனுப்புக. நக்ஷத்திரம், ராசியைக் குறிப்பிடவும். KL M Krishnapillaiy, ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், மாவிட்டபுரம். 3357

ஆ. வ. சதாசிவம்
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்
காங்கேசந்துறை.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# யாழ். நீதிமன்றத்தில் 64 சைக்கிள்கள்!

[யாழ்ப்பாணம்]

திருட்டுப்போனதாகக் கூறப்படும் 64 சைக்கிள்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சைக்கிள்களை யாழ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு ஜி டபிள்யூ பிரேமதாசா சார்ஜன் ஏ பேரேரா ஆகியோர் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சைக்கிள்களின் உரிமையாளர்கள் தக்க அத்தாட்சிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சைக்கிள்களை பெற்றுக் கொள்ளலாம்.

இச் சைக்கிள்களை பெற விரும்பும் உரிமையாளர்கள் 400 ரூபாவிற்கு ஒப்பந்த கையெழுத்திட்ட பின்னரே பெற்றுச் செல்லலாம் என பொலிசாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிளை பெற்றுக் கொள்ளும் உரிமையாளர்கள், தேவைப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

சைக்கிள்களின் விபரங்களை யாழ். நீதிமன்றத்திலும் பொலிஸிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சைக்கிள்களை 6 மாத காலத்திற்குள் உரிமையாளர் பெற்றுக் கொள்ளாவிடில் பகிரங்க மென்றும் பொலிசார் தெரிவித்தனர். ஏலத்தில் விற்கப்படும் [கொ]

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை, காலஞ்சென்ற சிற்றம்பலம் மகன் திருஞானசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

கதிரவேலு நவரத்தினம் பளை தெல்லிப்பழை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் 35 T

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் நாளன்று அதில், அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. 1979ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்
பதிவாளர்

தயாரித்தது
ஆ. வ. சதாசிவம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. 3352

## புத்தூர் கொள்ளை வழக்கில் ஆறு எதிரிகளும் விடுதலை

[யாழ்ப்பாணம்]

புத்தூர் கொள்ளை வழக்கில் எதிரிகள் 6 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம் ஜாமில்முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் புத்தூரைச் சேர்ந்த எம். ஞானச்சந்திரன் எம். தெய்வேந்திரன், எம். சிவகுரு, பி. இராசதுரை, கே. செல்வரத்தினம், எம். சின்னத்தம்பி ஆகியோர் 77 ஏப்ரல் 10ம் தேதி இரவு புத்தூரைச் சேர்ந்த ஈ வேலுப்பிள்ளையின் வீட்டை உடைத்து 19,000 ரூபா பெறுமதியான நகைகளையும், ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

1ம், 2ம் 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி எஸ். சுரேந்திரன், சட்டத்தரணி திருமதி ஆர். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 4ம், 6ம், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி எஸ் திபாகேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள்; 5ம் எதிரிசார்பில் சட்டத்தரணி திருமதி ஆர். சுரேந்திரன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராஜா வழக்கை நடத்தினார். [க]

## ஆலய வளர்ச்சிக்கு ஒற்றுமை அவசியம்

[வேலணை]

நாட்டிலுள்ள ஆலயங்களின் வளர்ச்சிக்கு மக்கள் ஒரு மனதுடன் ஒற்றுமையாக உழைக்க முன்வரவேண்டும். அப்படி ஒற்றுமையாக உழைத்தால்தான் ஆலயங்கள் மிகச் சிறப்பாக வளர்ச்சியடைய முடியும்.

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்திகோவில்வளாகத்தில் நடந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் மு. தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

திரு தம்பிமுத்து மேலும் கூறியதாவது:-

ஒருவருக்கொருவர் போட்டி பொறாமை கொண்டுவருவார்களேயானால் அந்த ஆலயங்கள் எந்தக்காலத்திலும் வளர்ச்சியடையாது. பிற்போக்கான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் சைவசமயமே ஏனைய மதத்திலும்பார்க்க சிறந்ததாகப் பலர் கூறிவந்திருக்கின்றார்கள் இருந்தாலும் எந்த மதமாக இருந்தாலும் அந்தந்த மதத்தினர் தங்களது வளர்ச்சிக்கு உழைக்க முன்வரவேண்டும். (க)

## தொலைத்தொடர்பு உத்தியோகஸ்தர் 25ம் திகதி கூடுவர்

[யாழ்ப்பாணம்]

இலங்கை தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ பேசும் தபால் அதிபர்கள், தொலைபேசி இயக்குநர்கள் ஆகியோரைப் பாதிக்கும் விஷயங்கள் சம்பந்தமாகப் பல முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

அரசாங்க எழுது வினைஞர் சங்கம்' அஞ்சல் எழுது வினைஞர் சங்கம், அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். சங்கத்தின் செயற்குழுத் தேர்தலும் நடைபெறும். [கொ]

## அக்குரச நால்வர்

## கொலைவழக்கு எதிரிகள் மூவரும் விடுதலை

[கொழும்பு]

அக்குரச நால்வர் கொலை வழக்கில், விசாரணை முடிவில் 3 எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஜூரிசபையினர் 5-2 ஆகபிரிந்து எதிரிகள் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்தனர்.

இவ்வழக்கு கொழும்புமேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எல். எச். டி. அல்விஸ் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 1976ம் ஆண்டு ஜூன் 13ம் தேதி அக்குரசவில், திருமதி பிரசன்சிறுவணிக சேகரா (வயது 85) அவரது மகன் சுமித் வணிக சேகரா (வயது 56) காவலாளி எம் ஏ பியதாசா, பணியாள் மெர்லின் செனிவரத்தின (வயது65) ஆகியோரை கொலை செய்ததாகவும், 2 சைக்கிள்களையும், கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்ததாக கொடகே, சுனில் சந்தி ரஜ்யவர்த்தன ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம் எல் எம் அமீன் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி டட்லி பெரேரா ஆகியோர் ஆஜரானார்கள். 3ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி டட்லி பெரேரா ஆகியோர் ஆஜரானர்கள்.

அரசதரப்பில் அரச சட்டத்தரணி ஜி எல் எம் டி சில்வா அரச சட்டத்தரணி நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் ஆஜரானார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கு. 1. தம்பிமுத்து நடராசா
2. பெண் சரஸ்வதிதேவி
— வழக்காளிகள்

இல. ஈடு/204 எதிராக

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி-இராமலிங்கம் ரோட்டு 447ஆம் இலக்க 1. நாகமுத்து ஆறுமுகமும்
2. பெண் சண்முகவடிவும்
— எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு/204 ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள், 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி) மாதம் 29ஆம் திகதி [29-8-79] புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 1800/-ம், இதில் ரூபாய் 1000/க்கு 24-6-74 திகதி தொடக்கம் 1-11-74திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 382-80 சதமும். இதில் ரூபாய் 1530/- இறுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க்கோவிற்பற்று திருநெல்வேலியிலிறை "ஆராட்சிஉலகன் வளவும், சுக்கிரவாரடைக்கன் வளவும், முதலியார்வளவும்" உறுதிப்படி நிலப்பரப்பு 1 ஆருல் 1937ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19ஆம்திகதி உத்தரவுபெற்ற உலாந்தா வி. சண்முகலிங்கம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 3203ஆம் இலக்கப் படத்தின்படி B இலக்கமிட்ட துண்டு குளி 17 1/16ம், வீடும், பயிர்வகைகளும்' குறித்தகுளி 17 1/16க்கும் எல்லை கிழக்கு: விஞசி நாகலிங்கத்தின் ஆதனம், வடக்கு: ஆறுமுகம் சின்னத்தம்பியின் ஆதனம், மேற்கு பின்னுல் விபரிக்கப்படும் 2ஆம் ஆதனம், தெற்கு கைஒழுங்கையும் பின்னுல் விபரிக்கப்படும் 2ஆம் ஆதனமும். இதடங்கலும், தெற்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

2. மேற்படி இறை "ஆராட்சிஉலகன்வளவும், சுக்கிரவாரபணிக்கன் வளவும் முதலியார்வளவும்" நிலைப்பரப்பு 1 குளி1, ஆருல், 1937ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19ஆம் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா வி சண்முகலிங்கம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 3203 ஆம் இலக்கப்படத்தின்படியும், எங்கள்நெடுங்காலத் தடையற்ற ஆட்சிப்படியும் A இலக்கமிட்ட துண்டு நிலைப்பரப்பு 1ம், பயிர்வகைகளும், இந்தப் பரப்பு ஒன்றுக்கும் எல்லை கிழக்கு: மேலே விபரித்த 1ஆம் ஆதனமும், இவ்வாதனத்தின் பாவிப்புக்காக விடப்பட்ட பொதுஒழுங்கையும் கிணற்றுத் தூர்வைநிலமும், வடக்கு: மேலே விபரிக்கப்பட்ட 1ஆம் ஆதனமும், இளையவன் கந்தனின் ஆதனமும், மேற்கு: கார்த்திகேக பொன்னையாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு: கிணற்றுத்தூர்வை நிலமும், சின்னப்பன் செல்லையனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும். இதடங்கலும், குறித்த கிணற்றிலும், தூர்வையிலும், நிலத்திலும் பங்கும் குறித்த ஒழுங்கையில் இதற்குரிய பாவிப்புரித்தும்.

தெல்லிப்பழை
4-7-79.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும் ஏலவிற்பனையாளரும்.
3348

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலாம்பிகை துரைசாமி

சுண்டிக்குளியைச் சேர்ந்த திருமதி நகுலாம்பிகை துரைசாமி 20-8-79ல் காலமானர், இவர் காலஞ்சென்ற டாக்டர் வி. துரைசாமியின் அன்பு மனைவியும், அமிர்தானந்தன் (U K), விவேகானந்தன் (சட்டத்தரணி), டாக்டர் ஆனந்தன் (லீவர் பிறதர்ஸ், நைஜீரியா), திருமதி இரத்தினு சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மா (U K) ஈஸ்வரி, டாக்டர் பரிமளா (நைஜீரியா), டாக்டர் எம் சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு 88, கண்டி வீதி, வீதி, சுண்டிக்குளியிலிருந்து கில்லான்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

3356 தகவல்: டாக்டர் எம். சுந்தரலிங்கம்

## நல்லையில் ரதோற்சவம் காண்போம்

# வேலவனை நாம் தொழுதால் வினையெல்லாம் தீர்ந்துவிடும்

இன்று காலை ஏழு மணியளவில் நல்லூரில் வள்ளி தேவசேனா சமேத சிவஷண்முகப்பெருமான் வெள்ளிப் பீடத்தில் அமர்ந்து வேலும் மயிலும் தங்க ஆபரணங்களும், உத்திராட்ஷ மாலையும் அணிந்து சர்வ அலங்காரங்களுடன் தங்கமணி மண்டப ஊடாக ராஜகோபுரவாசலை அடையும்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் தேர் ஏறச் செல்லும் திருமுருகனின் திருக்காட்சியை கண்குளிரக் கண்டு இருகைகூப்பி வணங்கிநிற்பர்!

இந்தப் பொன்னானநாளில் ''ஆறுமுகனுக்குகந்த ஆறு படை வீடுகள்'' எனும் மதுரை திரு என். பத்மநாபன் எழுதிய நூலில் இருந்து ஆறுமுகப் பரம் பொருளின் பெருமையையும், தத்துவங்களையும் விபரிக்கும் சில பகுதிகளை, முருகனடியார்கள் அறிந்து உய்யும் பொருட்டு கீழே தருகின்றோம்:-

''ஆறு சமயங்களும்தானே என்பதற்குறிகுறியாய் ஆறு திருமுகங்களும், அடியவர்க்கு அருள்வாரி வழங்கப் பன்னிரு திருக்கரங்களும், மாறா இளமையும் மனங்கவர் எழிலும் கொண்டு விளங்கும் திருமுகன் விரும்பி வீற்றிருந்த குளும் படைவீடுகள் ஆறுகும்'' அவையாவன! (1) திருப்பரங்குன்றம் (2) திருச்செந்தூர் (3) பழநி (4) சுவாமிமலை (5) [அ] சுருளிமலை (ஆ) இலஞ்சி [இ] குன்றக்குடி [ஈ] விராலிமலை [உ] வயலூர் (ஊ) வைத்தீஸ்வரன் கோயில் (எ). திருத்தணி [6] பழமுதிர்சோலை

''முருகனை- ஆறுமுகனை- பத்மநாபன் மருகனைப்பற்றிப் படிக்கப் படிக்க, கேட்கக் கேட்க, நினைக்க நினைக்க. தியானம் செய்யச் செய்ய கிடைப்பது என்ன? அவனை- அவனருளை- சித்திப்பேரர் இம்மை இன்பமும் மறுமை இன்பமும் அடைவதுறுதி.''



''முருகு என்றால் என்ன? அழகு என்று பொருள். எனவே முருகன், அழகன், அழகிருக்குமிடத்தில் அன்பு துலங்கும். அன்பு இருக்கும் இடத்தில் உண்மை மிளிரும். மெய்யிருக்குமிடத்திலே செம்மை ஒளிரும். செம்மையிருக்குமிடத்திலே நன்னயம் துலங்கும். அந்த நன்னயத்தை- நன்மனத்தை நாடுவோர்க்கு நல்லுய்வு கிடைக்கும்.''

''ஆறுமுகன் இல்லாத இடம் ஏது? எங்கும் நிறைந்த பரிபூரணனல்லவா! குன்று தோறாடும் குமரன், குன்றக்குடியிலிருக்கின்றான், சுருளி மலையிலுள்ளான், விராலிமலையிலிருக்கிறான், இலஞ்சியிலுறைகின்றான், வயலூரிலுள்ளான், வைத்தீஸ்வரன் கோயிலிலுமிருக்கிறான், ஏழ்கழுகுமலை போன்ற இன்னும் பல குன்றத் தூர்களிலுமுள்ளான். ''ஞான வேலனை வியாகுலமிகுந்து வருந்தி அழைத்தால் தாவிப்பாய்ந்து அஞ்சேலென்று முன்வந்து நிற்கும் வடிவேல். எனவே. எந்தவகை இடுக்கண் வந்தாலும் சிங்காரவேலனை நினைத்து. ''எட்ட நில் பகையே துள்ளி வருகுது வேல்'' என்று சொல்லத் தாண்டும். துரத்தும் பகை தூரத்தில் பறந்து போகும் வேறென்ன?

''ஆறுபடைவீடுகள்'' எனும் நூல் ஆசிரியரின் பணிவுரையிலிருந்து சில மணிகள்:

''சராசரங்கள் அனைத்தையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள் இறைவனை உணர்ந்து அவனை சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பமடையலாமென்பது சமயங்கள் காட்டும் பெருண்மை.

சந்திரமண்டலத்துக்கு செல்லும் அளவு விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இந்தக் காலத்தில் சமயம் கூறும் இறையுணர்வு தேவையா என்ற வினா எழுவது சகஜம். விஞ்ஞான அறிவும் அதில் நம்பிக்கையும் பெருகப் பெருக சமய உணர்வும் அதில் நம்பிக்கையும் நாளாக நாளாக மறைந்து விடும் என்றும் சிலர் கூறுவர். எவ்வளவுதான் விஞ்ஞானத்தில் முன்னேற்றம் அடைந்தபோதிலும் மனித ஆற்றலுக்கு ஒரு எல்லையுண்டு. எத்தனையோ விதமான அரிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், மனிதன் மரணத்தை வெல்ல முடியவில்லை. தன் இச்சைப்படி தன்னுடைய பிறவியையும் மாற்றி அமைக்க இயலவில்லை. மேலும் வாழ்நாளில் ஏற்படும் இன்பதுன்பங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும் முன்கூட்டியே அறிந்து சரிப்படுத்தவும் நமக்கு சக்தியில்லை ஆகவே மனித ஆற்றலுக்கு மேற்பட்ட சக்தியொன்று இயங்கிவருகின்றது என்பதும் அதனையே இறைவன் எனப் போற்றுகின்றோம் என்பதுவும் தெளிவாக விளங்குகின்றது.

இனிமேல் இறையுணர்வு அவசியம் தானா என்பதை ஆராய்வோம். உருவ அமைப்பில் மக்களெல்லாம் ஒரே விதமாக காணப்பட்ட போதிலும் வாழ்க்கையில் அவர்களிடையே ஏற்ற தாழ்வுகாணப்படுகின்றனவே''. இந்த வினாவைத்தான் லெயோன் டியோனிஸ் என்ற மேல்நாட்டு அறிஞரும்'' ஒருசிலருக்கு மாத்திரம் சுபிட்சமும். மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வும், ஒரு சிலருக்கு தீராத துன்பமும் தவிர்க்க முடியாத கஷ்டங்களும் ஏன் வருவான் என்று அவர் எழுதியலைவ் அன் டெஸ்டினி (Life and Destiny) என்ற நூலில் கேட்கிறார்.

### விடைகாணமுடியாத விஞ்ஞானம்

''விஞ்ஞானம் விடை காண முடியாத வினாவிற்குச் சமயம் பதில் கூறுகிறது. ஆன்மாக்கள் மாசு நீங்கித் தன்னை உணர்ந்து இன்பம் பெறவேண்டியே இறைவன் பல பிறவிகளை அவைகளுக்கு அருளுகின்றான் எனவும், அவைகள் தாம் எடுத்த பிறவிகளில் தாங்கள் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தக்கவாறே, வினைப்பயன்களுக்கேற்ப இன்பதுன்பங்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் அனுபவிக்கின்றன வென்றும் சாஸ்திரங்கள் அறிவிக்கின்றன.

''மண்ணுளே சில வியாதி
மருந்தவன் அருந்தி
யோடும்
திண்ணமாய் அறுத்துக்
கிறித்தீர்த்திடும் சிலநோ
யெல்லாம்
கண்ணிய கட்டிபாலும்
கலந்து உடன்கொடுத்துத்
தீர்ப்பன்
அன்னலும் இன்ப துன்பம்
அருந்தியே விளையப்
பன்''
— சிவஞானசித்தியார்

''இப்பெருண்மையை உணர்ந்து தெய்வ சிந்தையுடன் வாழ்ந்தால் வினைகளிலும் வினையும் பயன்களிலிருந்து விடுபடுவதோடு, பிறவிப் பிணியையும் போக்கிக்கொள்ளலாம் என்பது ஆன்றோர் கண்ட முடிவு. இதனை, ''இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு'' என்ற குறளும் இறைவனது நாமத்தை வாயினுல் பாடி, மனத்தினுல் சிந்திக்க ''போயபிழையும் புகதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்'' எனத் திருப்பாவையும் வலியுறுத்துகின்றன குசை நமசிவாயர் அருளிய அருணகிரி யந்தாதியும்,

''மாண்டு பிறந்துழலு மாப்
பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்தனக்கு வேண்
டுமோ-வீண்டுலகில்
வினேசர் சொல்லை விரும்
பாம நெஞ்சமே
சோணேச னென்றொருக்
கால் சொல்''
என்று விளக்குகின்றது.

''ஆறுமுகப் பெருமானின் பெருமையையும் ஆறுபடைவீடுகளின் மகிமையையும் எடுத்துக்கூறுவதென்பது எளிய காரியமன்று இறைவனது பெருமையை விளக்கும்பொழுது திருமூலநாயனாரே,

''ஆறி வார்எங்கள் அண்
ணல் பெருமையை
யாரறி வாரிந்த அகல
மும் நீளமும்
பேரறி யாதபெருஞ்சுடர்
ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின்
றேனே''
எனக் குறிப்பிட்டுள்ளார்.

''ஆதிசங்கராசாரிய சுவாமிகளும் ஸ்ரீசுப்ரமணிய புஜங்கத்தைப் பாடும்பொழுது, ''எனக்குச் சொல்லும் தெரியாது, பொருளும் தெரியாது, ஓசையும் தெரியாது. உரை நடையும் தெரியாது, ஆயினும் முருகப்பெருமானே! உன்னுடைய ஆறுமுகங்களையும் உள்ளத்தில் நினைத்து வழிபட்டால் அருமையான வாக்குகளெல்லாம் தானாகவே உண்டாகின்றன'' எனக் கூறியுள்ளார்.''

''முருகப்பெருமானது கீர்த்தியைப் படிப்பவர்களும், கேட்பவர்களும், தானதான்ய சம்பத்துகளும், சிறந்த புத்திர பாக்கியங்களும், நீடித்த ஆயுளும், ஆரோக்கியமும், இம்மையில் அடைவதோடு, மறுமையில் ஆறுமுகப்பெரு

(7-ம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: செ. இரத்தினசபாபதி

# மக்கள் கருத்து

## திருநெல்வேலிச் சந்தை

திருநெல்வேலியில் தினச் சந்தை கூடுவது பலரறிந்த விடயம். ஆயினும் இங்கு விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பொருள் கொள்வனவு செய்வோருக்கும், பாதசாரிகளுக்கும், அயலில் வசிப்போருக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் ஏற்படும் இடைஞ்சல்கள்பற்றி எவரும் அறியவில்லைப்போல் தெரிகிறது

சந்தைக்கு அண்மையில் சைக்கிள் பாதுகாப்பு இடங்கள் உண்டு எனினும் பொருள்களை வாங்கவருவோர் சாதாரண நாட்களிலேயே வீதியின் ஓரமாக வைப்பதாக எண்ணிக் கொண்டு தமது சைக்கிள்களை வீதியை மருவியே வைப்பார்கள். வியாழன் வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் வீதிவாக நடந்து போவதே சிரமமாக இருக்கும் வகையில் வீதியெங்கும் சைக்கிள்கள் நின்றுகொண்டிருக்கும் (நான் ஒரு சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை வைத்து நடத்துகிறவனல்லன்) இப்பொழுது நல்லூர்த் திருவிழாக் காலத்தில் வீதியெங்கும் சைக்கிள் விழா! இதனுல் பாதசாரிகளும், பஸ் கார்- லொறி-சைக்கிள் போன்ற வாகனங்களும் போக்குவரத்தில் பெரும் இடைஞ்சல்களுக்கு உட்படுகிறார்கள்.

போதாததற்கு பல மோட்டார் கார்களும் வீதியின் இருபுறங்களையும் ஆக்கிரமித்து நடுவிலே ஓர் ஒற்றையடிப் பாதையைமட்டும் காட்டி நிற்கும். வெளியூர் மரக்கறிகளைக் கொணரும் லொறிகளும் சில வேளைகளில் வீதியில் நின்று வியாபாரஞ் செய்வதைக் காணலாம்

வியாபாரிகள் தமக்கென ஓர் இராச்சியத்தை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியாளராகிய விவசாயிகளை முறித்துப் பொருள் கொள்வனவு செய்வார்கள். நுகர்வோரிடம் இரட்டி இலாபம் வைத்து விற்பார்கள். இதனுல் உற்பத்தியாளரும் நுகர்வோரும் நட்டவாளிகளாக, வியாபாரிகள் கொழுத்த இலாபமடிக்கிறார்கள்.

வீதியின் ஓரங்களையும் அவர்கள் தமதாக்கிக்கொண்டு வியாபாரஞ் செய்கிறார்கள். வெறும் நிலத்தில் வீதியோரத்தில். உணவுக்கான காய்கறிகளைப் பரப்பிவைத்திருப்பார்கள். உள்ளே அழுக்கேறிய சாக்குகளின்மேல் வெண்டி- அவரைவகை-கத்தரி- மிளகாய் போன்றவற்றைக் குவித்து வைத்துக்கொண்டு, தாமும் அதே சாக்கின்மேல் நின்று கொண்டு பொருள்களை விற்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அவரை- கறி- பச்சை மிளகாய் முதலிய பண்டங்களில் எவ்விதக் கூச்சமுமின்றி மிதித்து அடியெடுத்து எட்டித் தராசையோ, படியையோ. சில்லறைக் காசையோ எடுப்பதை நான் கண்டேன்.

காய்கறிகளின் விலைகளைத் தான் விடுங்கள். சமைத்தும், சமைக்காமலும் உண்ணும் உணவுப்பண்டங்களின் புனிதத்தன்மையுமா இவ்வாறு கெடவேண்டும்?

விவசாயிகள் கொணரும் பொருள்களை நிறுத்துக்கொடுக்கத் தம்மைத்தாமே நியமித்துக்கொண்ட தராசரிகளும், தரகர்களும் இடுவதே விலைக்கான சட்டம்!

சந்தியை அடுத்துப் பல கடைகள் உள. தேநீர்ச்சாலைகளிலும், சைக்கிள கடையிலும் அதிகாலை முதல் இரவு வரை ரேடியோவையோ ரேப் றெக்கோடரையோ உச்சஸ்தாயியில் பாடவிட்டுக்கொண்டேயிருப்பர். ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொருவித இசை. எல்லா இசைகளும் இரைச்சலாக மாறி, வாகனங்களின் உறுமல்களோடும் மக்களின் சந்தடியோடும் பேரிரைச்சலாகிவிடுகிறது. அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றன அயலிலே சுகவீனமுற்றோரும், வயோதிபரும் அயர்ந்து தூங்க முடியாது. மாணவர்கள இந்த இரைச்சலில் படிக்க முடியாது.

இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு இல்லையா?

சந்தைக்குப் பொறுப்பான கிராமசபையும், அதன் ஆணையாளரும், சுகாதார பரிசோதகரும் உடனடியாகக் கவனஞ் செலுத்தவேண்டும்.

முன்புபோல் நல்லூர் ப.நோ கூ. சங்கமே இயலுமானவரை விவசாயிகளிடமிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து பாவனையாளருக்குக் கட்டுபடியாகுமாறும், புனிதமாகவும் விற்பனை செய்ய முன்வருமா?

அல்லது விற்பனைத் திணைக்களம் பெரிய காய்கறி விற்பனை நிலையமொன்றை இங்கு தொடங்குமா?

நுகர்வோர் சங்கம், பாவனையாளர் சங்கம் எனச் சங்கங்கள் பல தோன்றுகின்றன. ''காய்கறி நுகர்வோர் சங்கம்- திருநெல்வேலிச் சந்தை'' என ஒரு சங்கத்தை யாராவது அமைத்துச் செயற்றிறனுடன் இயக்க முன்வருவார்களா?

எல்லாவற்றுக்கும் மேலாக சந்தை நேரத்தில் பலாலி வீதியில் அமைந்துள்ள இச்சந்தையையடுத்துள்ள வீதி மனித நடமாட்டத்துக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் ஏற்ற வீதியாக அமையச் செய்வது எல்லோரது கடமையுமாகும். அதை நாம் பொலிஸாரின் உதவியை நாடாமலே செய்ய முடியுமாஞல், செய்வோமாக.

க. தி, ரவீந்திரன்.
நல்லூர்.

## கந்தன் தரிசனம் கோடி!

சங்கிலியன் ஆண்ட நிலம்,
சந்த இசை சேர்த்து
நந்திக் கொடித்தேர்
நனிதிவர்ந்த பெருவீதி!

கடலென மாந்தர், காலைக்
கதிரொளி பரவும் நேரம்!
மிடியிருள் அகற்றி, வண்ண
மீக்குயர் தேரிவர்ந்து!

அரிவையர் இருவரோடும்
அருளொளி பரப்பும் கந்தன்
தரிசனம்! கோடி, கோடி!!
சந்ததம் நிறையும், உய்வோம்!

--- பசுவூர் சு. மகாலிங்கசிவம்

# அதர்மத்தை அழித்து தர்மம் காத்த ஆறுமுகன்

அறப்போர்; தருமத்திற்கும் அதர்மத்திற்கும் இடையே ஏற்பட்ட பெரும் போர். இப்போரிலே சூரபன்மன் தன் தவவலிமையாற் பெற்ற வன் திறனை முன்வைத்து வானவர்களை வன்சிறைப்படுத்தி அக்கிரமம், அநியாயம் செய்து பலவகையிலும் தலைபுறந்து இன்னும் பொறுக்காத வானவர்தம் முறையீட்டால் முருகப் பெருமான் சூரபன்மனுடன் போர் தொடுக்கின்றார். உறவு மறந்து தன் படைப்பலமெல்லாமேயழிந்து விட்ணுக்களுக்கும் மற்றும் மேலான தேவர்கட்கும் மிக மேலாய் நின்ற ஐயன் எம் முருகப் பெருமாலன்றோ!" என்று தன்னுள் வியக்கின்றான். கச்சியப்பர் இதனைக் கண்முன் நிறுத்திக்காட்டுகின்றார்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப் பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்திலன்யான் மாலயன் தனக்கும் ஏனை

பெருமான் வடிவம் கண்டு கொண்டேன். நான் செய்த தவப்பலனிதல்லவா! என்றெண்ணுகிறான்.

போயின வந்நாள் போதம் புகுந்தன வலத்த தாளை
தூயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவனமெங்கும்
மேயின பொருள்கள் முற்றுந் தெணிப்படுகின்ற வின்றோர்
நாயகன் வடிவம் கண்டேன் நற்றவப் பயனீதன்றே!

இப்படி நினைந்த சூரன் மனம் எம்பெருமானைக் கட்டித் தழுவி வணங்கவேண்டும் சிரந்தாழ்த்தி நின்று நினைந் துருகி வழிபடவேண்டும். தவப் பெருமையும் புயவலிமையுமகன்று மற்றும் தீமையும் எம்பெருமான் முருகனுக்கு ஆளாக அகன்றான் பணிந்து வாழுதல் வேண்டும் என்று நினைக்கின்றான் பனினும் ஏதோ ஒன்று அவனுள் இருந்து அவனைத் தடுத்து நிறுத்துகிறது. அது தான் அவன் கொண்ட மானம்!

"மயிர் நீப்பின் வசமாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்"

என்கிறார் வள்ளுவர்



— இளம்பரணன் —

நின்ற சூரன் தானே சுற்றிச் சகல வரிசைகளுடனும போர்க்களம் புகுந்து வஞ்சினம் பேசி நிற்கின்றான். அந்த நேரத்திலே சூரனை எரித்துப் போர் புரிய வருகின்றான் எம்பெருமான்; அழகிய மயிலைத் தன் வாகனமாகக் கொண்டு இவர்ந்துவருகின்ற குமரக் கடவுளைக்கண்டு சூரனின் மனம தடுமாறுகிறது.

"ஆ! இவன் ஒரு பாலன் என்றல்லவா இதுவரைஎண்ணியிருந்தேன். இவன் தன் பெருமையை அந்நாள் உணருந்திறன் அற்றவனாகிவிட்டேன்! அண்ட சராசரங்களையும் படைத்துக் காக்கும் பிரம

வானவர் தமக்கும் யார்க்கும்
முருகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ!

முருகப் பெருமானைக் கண்ட சூரன் தன் மனநிலை மாறிப் புதுநிலை பெறுகின்றான் அவனைப் பிடித்த ஆசந்தை அகன்றது. அறிவு ஆட்கொள்ளுகின்றது. வலிமைமிக்க தோளு எழில் மிக்க கண்ணும் எம்பெருமான் கருணைபொழியும் எழில் வதனங் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் துடிக்கின்றன. அகிலமெல்லாந் தோன்றும் பொருள்களெல்லாம் காட்சி தரும் நாயகன் எம்

கூடுதல் வேண்டுந் தான்கள் தொழுதிடல் வேண்டும்—அன்னை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலும்
ஆழுதல் வேண்டுந் தீமை யகன்று நானிவற் காளாகி
வாழுதல் வேண்டும், நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே!

பின்னும் அவன் மனதிலே சில எண்ணங்கள் தடுமாறுகின்றன.

சிறைவிடுவிக்கப்பட்ட என்னற்ற தேவர்களைச் சிறை நீக்கி எம்பெருமான் குமரக்கடவுளை வணங்கி இந்த உடலின்று உலாவும் உயிரைப் பேரிவதனை நினைந்து வாழ்வான். எனினும் நான் எனினும் என் புயபராக்கிரமத்தின் துணை கொண்டு கட்டியாண்ட ஆயிரங் கோடியண்டங்களையும் என் புகழையும் என் வீரத்தையும் இழந்ததாகாதா?

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி இனியர் போல் உறுவன் என்னின்
ஆனதோ ரனைத்தி தம்மா ஆயிர கோடி யண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றிடாவோ

முடியவே முடியாது. சூரன் மனம் திடம்பெறுகிறது குன்றெறிந்த குமரக் கடவுளுடன் போர் செய்து வெற்றிபெற்று நிற்பன், அல்லாமலும் இப்படியான ஒரு போரை ஆக்கிவைத்து வானவர்கள் அனைவரையும் இன்று அவர்தம் உயிர் குடித்து எனக்கு ஏற்பட்ட சினத்தை ஆற்றுவன் என்கின்றான்.

குன்றினை எறிந்த வேற்கைக் குமரனோ டமராற்றி
வென்றிடு கின்றேன் அல்ல மேலது நிற்க இந்த
வன்றிறற் சமரை மூட்டி நின்ற வானவரையெல்லாம்
தின்றுயிர் குடித்து முன்னெனன் சினஞ்சிறு தணிவனென்றான்

வானவர் தம் உயிரைக் குடித்து அவர்களைக் கொன்றழிப்பன் என்று கருவம் பொங்க விண்ணுலகு நோக்கி விரைந்து வருகின்றான் சூரன். சூரன் தம்முயிர் கொள்ள வரும் கூற்றென உணர்ந்த வானவர்கள் செய்வதென்னவென் அறியாது அழுது அரற்றி எம்பெருமானிடம் அபயம் அபயம் என அலறி ஓடுகின்றனர்.

கண்ணினர்க் கினியாம் ஓலம் ஞான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமானல்கு கடவுளே ஓலம் ஓலம் ஓலம்
தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவருமாகி நின்ற மூர்த்தியே ஓலம், ஓலம், ஓலம்

முடிவு! தர்மம் வென்றது அதர்மம் அழிந்தது சூரபன்மன் எம்பெருமான் வேற்படைக்கு ஆளாகி அழிக்கப்பட்டான். ஆணவம் அழிந்தது தர்மம் தலை காத்தது.

# எம் பெருமானிடம் சரண்புகுவோம்

நல்லைநகர் செவ்வேற் பெருமானுக்கு இன்றுரதோற்சவம். எம்முன்னத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பெருமானை இரதத்தில் எழுந்தருளச் செய்து வழிபாடும் செய்யும் வாய்ப்பு இன்று எமக்கு ஏற்படுகிறது ஆண்டுக்கொரு நாள் இந்த வாய்ப்பு ஆனந்தமாய், அறிவாய், நிறைந்த அமுதமாய் நல்லைக்கந்தன் அடியவர்க்குச் சுவைக்கிறான். இந்நாளில் நாமும்

"கண்ணினர்க் கினியாய் ஓலம்
ஞான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம்
பரஞ் சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம்
யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமானல்கும்
கடவுளே ஓலம் ஓலம்"

என்று எம்பெருமானிடம் சரண்புகுந்து நிற்போமாக.

—தங்கம்மா அப்பாக்குட்டி


ரதமேறு கந்தன் நலம்தேடி வந்த அடியார் வினை தீர்ப்பான்

| | | |
|---|---|---|
| கண்ணுக்கினிய | நகைகளுக்கு | ஜப்பான் ஜூவலர்ஸ் |
| கருத்தைக் கவரும் | நகைகளுக்கு | ஜப்பான் ஜூவலர்ஸ் |
| மாற்றுக் குறையாத | நகைகளுக்கு | ஜப்பான் ஜூவலர்ஸ் |

ஞாபகத்தில் என்றும் வைத்திருக்கவும்

## ஜப்பான் ஜூவலர்ஸ்

64, கன்னாதிட்டி ரேட். போன்: 518 யாழ்ப்பாணம்.




தேரில் பவனிவரும் நல்லூர்க்கந்தன் எங்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும் அருள் புரிவாராக.

## ராஜு ஸ்ரோர்ஸ்

நேரடி இறக்குமதியாளர்

பழச்சத்துக்களும் பழரசபானங்களும் கலர் தினுசுகளும்

நெ குற்றும் இயந்திரங்களும் அதன் உப உறுப்புக்களும்



மாவு அரைக்கும் இயந்திரங்களும் அதன் உபஉறுப்புக்களும்

மின்சார மோட்டோர்களும், மற்றும் மின்சார உபகரணங்களும் மலிவாகப் பெற்றுக்கொள்ள

போன்: 372 ராஜு ஸ்ரோர்ஸ் தந்தி; ராஜு

67, 69, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


புனிதகங்
ஸ்ரீசங்கராச்

[கொழும்பு]
வட இந்தியாவிலுள்
ஸிய கங்கையில் இ
'அஸ்தி' கரைக்கவி
அதற்கு ஆவனசெய்
தலைப்புக்கொடுக்க
வாரத்திலுள்ள ஸ்ரீ
சாரியர் மடம் மூ
ளது.
காஞ்சிகாமகோடி
பதி ஸ்ரீஜயேந்திர
சுவாமிகளின் டில்லி
பிரத்தியேகக் காரியத
எம். எஸ். கிருஷ்ண
இத்தகவலைத் தெரிவி
இலங்கை வந்துள்ள
எம். எஸ். கிருஷ்ண
ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி
களின் நேரடி அழை
றையும் ஆத்மஜோதி

"மொழ
காப்பது

[காரைநகர்]
இன்று சிறுவர் தி
பெரு மகிழ்ச்சியோடு
டாடும் இந்த கல்
மற்ற சிறுர்களின்
யினைக் காணும்போது
களின் ஆர்வத்தைக்
நான் மிகவும் பெரும
கின்றேன். குழந்தை
எதிர்காலத்தைக் கருதி
எமது மொழி, பிரதே
யவற்றைக் காப்பது
தலையாய கடமையாகு
இவ்வாறு வட்டுக்
டைத் தொகுதி நாடா
உறுப்பினர் திரு த
நாவுக்கரசு காரைநகர்
சிறுவர் பாடசாலை நட
கலை விழா வைபவத்தி
யாற்றுகையில், மே
வாறு கூறினார்.
அவர் மேலும் பே
கூறியதாவது:- இன்
இபாவகரமான கா

பொன்விழ
கொண்டாட

[சரவணை]
சரவணை "நாம
வித்தியாசாலையின்
ஆண்டுகள் பூ
போட்டி "பொன்வி
நடாத்த முடிவுசெ
டுள்ளது.
பழைய மாணவர்கள்
ரோர் ஆதரவில் நடை
இவ்விழாவில் பிரதம
வர்களாகயாழ் மாவட்
லாளரும் அரசாங்க
மான திரு யோகேந்தி
சுவாமி, ஊர்காவ
எம்.பி பண்டிதர் கா
இரத்தினம், வடமாநி
பாதிபதி திரு. தி
வாசகர் ஆகியோர்
கொள்வர். 'பொ
மலர்' ஒன்றும் வெளி
யிடப்படவுள்ளது.
க. இராசையா தலை
ஆசிரியர் திரு பி க
ளம் செயலாளர
கொண்ட மலர்க்குழு
அமைக்கப்பட்டுள்ளது

கிளைக் குழு
பிரதான கட

(அளவெட்டி)
அளவெட்டி மல்லா
நோக்குக் கூட்டுறவுச்
சிலை உறுப்பினர்க
கருத்தரங்கொன்று,
மண்டபத்தில் சங்கத்
திரு. நாகலிங்கம் த
நடைபெற்றது.
கூட்டுறவு உணர்ச்
ளிடம் வளர, அதற்
பணி புரிதல் கிளைக்
பிரதான கடமைகள்
றென திரு குமாரசா
உரையில் கூறினார்.
கடனுக்குரிய மக்களி
ணப்ப மனுக்களைக்
குழுவின் நுணுக்க ப
கூடாகச் செயற்கு
சேரவேண்டிய கட்
செயற்பாடுகளையும்
விளக்கினார்.

## ...ளிதகங்கையில் அஸ்திகரைக்க ...ஸ்ரீசங்கராச்சாரியார் மடம் உதவும்

[கொழும்பு]

... இந்தியாவிலுள்ள புண் ...கங்கையில் இந்துக்கள் ...தி' கரைக்கவிரும்பினால் ...து ஆகவேண்டிய ஒத் ...ப்புக்கொடுக்க ஹரித்து ...த்திலுள்ள ஸ்ரீசங்கராச ...ர் மடம் முன்வந்துள் ...

...ஞ்சிகாமகோடி பீடாதி ... ஸ்ரீஜயேந்திரசரஸ்வதி ...களின் டில்லியிலுள்ள ...ரியேகக் காரியதரிசி திரு ... எஸ். கிருஷ்ணமூர்த்தி ...வலைத் தெரிவித்தார். ...கை வந்துள்ள திரு ...எஸ். கிருஷ்ணமூர்த்தி ...யேந்திர சரஸ்வதி சுவாமி ... நேரடி அழைப்பொன் ... ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவிடம் கையளித்தார்.

இந்தோனேஷிய இந்துமக்களின் சமய முன்னேற்றம் சமயசம்பந்தமான தேவைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திரு. நா. முத்தையாவுக்கு அனுப்பியுள்ள நேரடி அழைப்பில் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இந்துமகாநாட்டிற்கான ஆலோசனைகளையும் திரு நா. முத்தையா காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஜயேந்திரசரஸ்வதி சுவாமிகளிடமிருந்து பெற்றுக்கொள்வார். [அ]

## "மொழிபிரதேசத்தை காப்பது நம் கடமை"

[காரைநகர்]

...ழு சிறுவர் நிறைந்தைப் ...தமிழ்ச்சியோடு கொண் ...ம் இந்த கண்ணங்கபட ...ம சிறார்களின் நிகழ்ச்சி ... காணும்போது, இவர் ... ஆர்வத்தைக் கண்டு ... மிகவும் பெருமிதமடை ...ன். குழந்தைகளின் ...காலத்தைக் கருதியாவது ... மொழி, பிரதேசம் ஆகி ...வை நாம் காப்பது எமது ...ய கடமையாகும்.

...வாறு வட்டுக்கோட் ...தொகுதி நாடாளுமன்ற ...பினர் திரு நா. திரு ...அரசு காரைநகர் திக்கரை ... பாடசாலை நடாத்திய ...ழா வைபவத்தில் உரை ...கையில், மேற்கண்ட ... கூறினார்.

...ர் மேலும் பேசுகையில் ...தாவது:- இன்று நாம் ...பரமான காலகட்டத்தி இருக்கின்றோம். நாடாளுமன்ற பதவி பறிக்கப்பட்டு, சாதாரண கூட்டணி அமைப்பாளராக பணிபுரியவேண்டிய நிலை உருவாகக்கூடிய சூழ்நிலையில் நாம் இருந்துவருகிறோம்.

ஆகவே எமது மொழி, பிரதேசம் ஆகியவற்றைக் காப்பாற்றவேண்டியது ஒவ்வொரு தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

இவ்விழாவிற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. தம்பையா தலைமை தாங்கினார்.

சட்டத்தரணி திருமதி நா. திருநாவுக்கரசு வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். [எ]

## ...பொன்விழா ...ண்டாட முடிவு

[சரவணை]

...வணை "நாகேசுவரி" ...பாடசாலையின் ஐம்பது ...தின் பூர்த்தியை ...டி "பொன்விழா" வை ...த முடிவுசெய்யப்பட் ...து.

...ழைய மாணவர்கள், பெற் ...ஆதரவில் நடைபெறும் ...ழாவில் பிரதம விருந்தி ...யாழ்ப்பாணம் மாவட்டசெய ...தும் அரசாங்க அதிபரு ...திரு யோகேந்திரா துரை ...ர், ஊர்காவற்றுறை ... பண்டிதர் கா. பொ ...இனம், வடமாநில வித்தி ...தி திரு. தி மாணிக்க ...ர் ஆகியோர் கலந்து ...வர். 'பொன்விழா ... ஒன்றும் வெளியீடு செய் ...டவுள்ளது. பண்டிதர் ...ராசையா தலைவராகவும் ...யர் திரு பி சுப்பிரமணி ... செயலாளராகவும் ...ட மலர்க்குழு ஒன்றும் ...க்கப்பட்டுள்ளது [எ]

## மகா கும்பாபிஷேகம்

(சரவணை)

சரவணை-தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 29ம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது

சட்டத்தரணி திரு சச்சிதானந்தசிவத்தைத் தலைவராகவும் கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு த தெட்சணாமூர்த்தியைச் செயலாளராகவும் கொண்ட திருப்பணிக்குழு இதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது.

## பற்றுக்குறை

[காரைநகர்]

காரைநகரிலுள்ள ஊரி அ மி பாடசாலை, தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை ஆகியவற்றின் ஆசிரியர் பற்றுக்குறையினை நிவர்த்தி செய்யுமாறு சீ-தோர் சமூக அ வி. பகுதி உத்தியோகத்தர் திரு எஸ் ரவீஸ்வரன் வடமாநில கல்வி அதிபதி திரு தி மாணிக்கருக்கு வேண்டுகோளொன்று விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளின் பிரதிகள் வட்டுக்கோட்டைதொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ திருநாவுக்கரசுவுக்கும் வட்டுக்கோட்டைத் தொகுதி கல்வி அதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது. [எ]

## ...ளக் குழுவின் ...தான கடமை

(அளவெட்டி)

...வெட்டி மல்லாகம் பல ...நல் கூட்டுறவுச் சங்கச் ... உறுப்பினர்களுக்கான ...ரம் ஒன்று, சங்க ...டபத்தில் சங்கத் தலைவர் ...நாகலிங்கம் தலைமையில் ...பெற்றது.

...உறவு உணர்ச்சி மக்க... வளர, அதற்கமைய ... புரிதல் கிளைக் குழுவின் ...ன கடமைகளில் ஒவ் ... திரு குமாரசாமி தமது ...யில் கூறினார். வங்கிக் ...க்குரிய மக்களின் வின ... மனுக்களைக் கிளைக் ... நுணுக்க பரிசீலனைக் ... செயற்குழுவுக்குச் ...வேண்டிய கட்டாயச் ...ற்பாடுகளையும் அவர் ...னார்.

## நிதி ஒதுக்கீடு

[காரைநகர்]

ஊர்காவற்றுறைப் பிரிவு நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. சுந்தரலிங்கம் தோப்புக்காடு கடற்கரை வீதியில் அமைந்துள்ள மார்ப்புப் பாலத்தின் திருத்த வேலைகளைச் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இப்பாலத்தின் திருத்த வேலைக்கு நிதி ஒதுக்குமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. நா. திருநாவுக்கரசுவை சீ-தோர் சமூக அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. ச ஸ்ரவிஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இவ்வருடப் பன்முக படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. [எ]

## டிராக்டர் மூலம் குடிதண்ணீர்

(சரவணை)

சரவணைக் கிராம மக்களின் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்குவதற்குத் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் க பொ. இரத்தினம் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து டிராக்டர் மூலம் வேலணை சாட்டியிலிருந்து தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது. நிரந்தர தண்ணீர் விநியோகத்தை இப்பகுதி மக்களுக்கு உதவுமாறு கோரப்படவுள்ளது.

## தேரில் இனிது வருகவே

கந்தா முருகா காங்கேய கார்த்தி கேயா பார்வதியார்
மைந்தா வள்ளி தெய்வானை மருவும் இனிய கணவாளா
எந்தாய் நல்லூர் எழுந்தருளும் இறைவா வருக மெய்யடியார்
சிந்தா குலந்தீர்த் தருள்செய்யத் தேரில் வருக வருகவே

ஞானப் பழமே நறும்பாகே நாளுந் தெவிட்டாத்
தெள்ளமுதே
தேனே பாலே தீங்கரும்பே தேடக் கிடையாத் திரவியமே
கோனே என்றன் சந்நிதியில் கவிக் குழையும்
அடியார்க்கு
ஏனோர் தமக்கும் அருளத்தேர் இவர்ந்து வருக வருகவே.

--பண்டிதர் அ ஆறுமுகம்

ஃ ஃ

வடிவேலே வடிவே வண்ணமயில் குமரா
மணியோசை கேட்டிடவே மனமுருகி நின்றேன்
அடியார்கள் நெஞ்சமதில் அன்புருவா னவனே
அழகுமயில் மீதேறி அவனியெலாம் வந்தாய்
முடியாத வாழ்வுதரும் முத்தமிழ்நா யகனே
முத்துதவ ரத்தினத்தேர் மீதினிலே ஏறி
கடிதான மனம்விட்டுக் களிவுடனே வாராய்
கனக மணி மார்புடைய கந்தவேலே கடம்பா

--முல்லைக்கவி

ஃ ஃ

இராகம்-கல்யாணி தாளம். ஆதி

பல்லவி

தேரேறிப் பவனிவரும் தீரனே-நகைத்
—தேரேறி

அனுபல்லவி

நாலாறு திசையெல்லாம் ஓடோடி வருமன்பர்
கோணு தருள் சரக்குந் தேவனே அழகுமிகு
—தேரேறி

சரணம்

தீராத வினையெல்லாந் தீர்ப்பவன்நீ யென்றுமவர்
ஓடோடி வந்தனது அருள்பொழியு மாறுமுகம்
நேராகக் கண்டுநெஞ்சம் பாகாயுருகிக் கண்கள்
ஆறுகச் சொரிந்திடவே அளிப்பாயே பேரின்பம்
—தேரேறி

·ஏ, நமசிவாயம்

ஃ ஃ

நல்லைநகர்ச் செல்வேள் நறுங்கனகப் பூந்தேரில்
வல்லே இவர்ந்து வருகின்றார் - தொல்லை
வினைமாய்த்துக் காத்தெமக்கு வீட்டின்பம் நல்க
நினை தேவி மார்புடையே சூழ்ந்து

செல்லப்ப சாமிக்குத் தேரடியிற் தோன்றிநின்று
நல்ல அருள்புரிந்த நல்லூரான் - எல்லையிலா
அன்பே உருவாய் அமர்ந்த அருளாளன்
இன்பந் தருவானை ஏத்து

ஆசையெனும் பேய்பிடித்து அல்லல் உறுநிருக்க
தேசமுடன் ஆண்டுகொண்ட நின்மலனை-தேசுடைய
பொற்தேர் பவனிவரும் பொன்னுளில் நல்லூரில்
நற்றவத்தீர் காண்பீர் நயந்து

– உரும்பராய் மு. வைத்தியலிங்கம்

ஃ ஃ

தங்கத்தின் திருமுகமோ
பொங்கிவரும் அருள்வடிவோ
சங்கத் தமிழ்தந்த
செந்தமிழின் வித்தகனோ
திங்கள் உருவெடுத்து
தொங்கும் மலர் தொடுத்து
எங்கள் வினை போக்க
எழுந்தனையோ பொன்ரதத்தில்

பொன்ரதத்தில் புகழ்பாட
போதாது ஓர்கவிதை
என் இதயத் தேரினிலே
எழுந்தருளும் நீ இன்று
பொன் ரதத்தில் வந்தனையோ
டோக்கிடவே தம் நயரை!

-- ராஜாராஜதுரை


அருள்வேண்டி நிற்கும் அடியார்களுக்கு
இருள்நீக்க வேண்டி இறைவனை
இறைஞ்சுகிறோம்

சகலவிதமான றெக்கோடிங் வேலைகளுக்கும்

றேடியோஸ்பதி

RADIOS PATHY

58, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7805

ரதமேறி வந்தே அடியார் தமக்கு ஆறுதலை அளிக்கும்
ஆறுதலை இருக்க அஞ்சுதலை நீக்குவாம்!
இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த
தங்க, வைர நகைகளைத் தெரிவு செய்ய
... மறவாதீர்கள்

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7199 தந்தி: 'வைரம்"

உங்களுக்குத் தேவையான
அழகிய பவுண் நகைகள்,
தங்கப்பவுண், வைரங்கள்
ஆகியவற்றுக்கு

கே. என். எம்.

மீருன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 585

நல்லையம்பதி வாழும் வேல் முருகா!
ரதம் ஏறி வந்தே வரமளிப்பாய்!!




மயிலேறு முருகன் ரதமேறி வந்தே துயர் நீக்கி
அருள்வான் வாருங்களே!

★ கவர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு

ஆகியவற்றுக்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்

நோர்தேண் இன்டஸ்றீஸ்

112, ஸ்ரான்லிரோட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

# 2000 கலன் பனங்கள் தினமும் ஊற்றப்படுகிறது!

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் தினமும் 2000 கலன் பனங்கள் நுகர்வோரின்றி ஊற்றப்படுகிறது.

கைதடி வடிசாலையில் தினமும் 200 கலன் பனங்கள் மட்டுமே வடிக்கப்படுவதாலும், பெருமளவில் சிவகாமி கள் அடைக்கும் தொழிற்சாலையில் கள் அடைக்கப்படாமைவாலும், தினமும் 2000 கலன் கள் வீணே வெளியில் ஊற்றப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

இதனால், தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களில் வேலைசெய்யும் 10,000 தொழிலாளர்கள் கூடிய பயனைப் பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது.

சென்றவருடமும், இதே மாதிரி, பெருந்தொகையான கள் வீணே ஊற்றப்பட்டது. [செ]

## "ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரனகத்திகழ்ந்தஎன்.எம்.'

[யாழ்ப்பாணம்]

'இலங்கையின் சுதந்திரத்திற்காகவும், தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் தனது வாழ்நாள் பூராகவும் உழைத்துவந்த ஒரு சிறந்த தேசியவாதியான கலாநிதி என் எம். பெரேராவை எமது நாடு இழந்துள்ளமை இன்றைய அரசியல் கால கட்டத்தில் தமிழ்மக்கள் உட்பட நாட்டின் சகல மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும் சிறந்த கல்விமானும், தலையாய தேசியவாதியுமான என் எம் பெரேரா அவர்கள் தொழிலாளர் பிரச்சனைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டு அவர் எமது நாட்டின் அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கியமை நாட்டு மக்களின் ஏகப்பட்ட பாராட்டுக்குரியதொன்றாகும் சிறைச்சாலைவாழ்வு சில அரசியல் தலைவர்களின் அரசியல் மார்க்கத்தை மாற்றியுள்ள போதிலும், என் எம் பெரேரா சிறைசென்றாலும் தனது அரசியல் மார்க்கத்தை என்றுமே மாற்றாதிருந்தமை அவரின் சிறப்பாகும் '

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜாதிக சமிதி யாழ் மாவட்டக்கிளை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது. இச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

'பிரித்தானிய கலை, சட்டதிட்டங்கள் பாராளுமன்ற மரபுகள் போன்றவற்றில் அவருக்கு ஈடுபாடு இருந்துவந்த போதிலும் ஆசியா முழுவதிலுமிருந்து பிரித்தானிய ஆட்சியாளர் வெளியேற வேண்டுமென்ற வேட்கையே அவரது உள்ளத்தில் பெரிதும் குடி கொண்டிருந்தது. இதனாலேயே அவர் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் பரம எதிரியாக விளங்கியதுமல்லாது, ஆசிய நாடுகளிலிருந்தும் விசேஷமாக இலங்கையிலிருந்தும் அந்த ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டுவதில் பெரும் பங்கை வகித்து ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரனாகத் திகழ்ந்தமை இந்நாட்டின் வரலாற்றிலே இடம் பெற்றுள்ளது. இத்தலைவரின் பிரிவுகண்டு நாம் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்'

## 'அரசியல் தாக்கம் ஏற்படுத்தியவர்'

[கொழும்பு]

'கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு இலங்கையின் பெரும் அரசியல் தலைவர்களின் வரிசையில் தனி இடம் பெற்ற ஒரு தலைவரின் மறைவாகும்' என்று தமிழர் விடுதலை கூட்டணியின் கொழும்புக்கிளை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது

பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பி, அதன்காரணமாக சிறைசென்றவர் டாக்டர் என் எம். அவரது அரசியல் கருத்து, பொருளியல் கோட்பாடுகளை நாம் ஏற்காவிட்டாலும், அவர் ஏற்படுத்திய அரசியல் தாக்கம், இலங்கை அரசியலில் நிலைபெற்றுவிட்டதை நாம் மறக்க முடியாது' என்றும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது' [ம]

## "பொருளாதார அறிஞனை நாடு இழந்து விட்டது"

(யாழ்ப்பாணம்)

இந்நாட்டு தொழிலாளர் உண்மையான தன்னலமற்ற தலைவனை இழந்துவிட்டார்கள் விவசாய பாட்டாளி பெருமக்கள் உத்தம நண்பனை இழந்து விட்டார்கள்''

அமரர் என் எம் பெரேராவின் மறைவு குறித்து அகில இலங்கை சுகாதார இலாகா சேவையாளர் சங்க முன்னாள் உபதலைவரும் அரசாங்கதொழிலாளர் தொழிற்சங்க சம்மேளன வடபிராந்திய முன்னாள் செயலாளருமான திரு எஸ். ஆர் அருமைநாயகம் விடுத்த அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''அரசியல் அரங்கிலே எதிரிகள் கூட ஏற்றுப்புகழும் பொருளாதார அறிஞனை இந்நாடு இழந்துவிட்டது உரிமைக்குப் போராடு உன் கடமையில் வழுவாதே என்று சங்கநாதம் செய்த கடமை வீரனை இந்நாடு இழந்துவிட்டது.

பாமர ஏழை பட்டாளிமக்களுக்குக் கொடுபட்டுவந்த இலவச அரிசியை நிறுத்தினால் தான் உலகவங்கி தொடர்ந்தும் நிதிஉதவும் என்ற உலக வங்கி நிர்வாகத்தின் கோரிக்கையை நிராகரித்து தன்கையே தனக்குதவி என்ற கொள்கையுடன் பொருளாதார சுதந்திர தன்னிறைவுக்காக - திட்டம் தீட்டி தன்னிறைவு கண்ட என். எம்மின் கொள்கை சகலராலும் போற்றப்பட்டதே

அவர் விட்டுச்சென்ற பணியை மேற்கொள்வோமெனச் சங்கற்பம்செய்வோம். [கோ]

## வீடுகள் கட்ட கடனுதவி

[காரைநகர்]

காரைநகரிலுள்ள ஊரிமடத்தவளவு கிராமங்களிலும் சுழிபுரத்திலுள்ளபுளியந்துறையிலும், தேசிய வீடமைப்பு இலாகா மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு ஈடுபட்டுள்ளார். [க]

## லஞ்சவழக்கில் கான்ஸ்டபிள் விடுதலை!

[கொழும்பு]

நூறு ரூபா லஞ்சம் பெற்றதாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு எதிராக தொடரப்பட்ட லஞ்ச வழக்கில் எதிரி நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

கினிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. செல்வநாயகம் தியாகராசா என்பவரே இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ. எஸ். எம். செனவிரத்தின முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி இ. சிறிநிவாசாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் ஆஜரானர். விசாரணை முடிவில் எதிரி நிரபராதி என நீதிபதி விடுதலை செய்தார்

(செ-கு)


# கட்பெறீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்




இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறீஸ் போண்விற்ரு சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம். இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

விதிகள்

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனல் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்ரு ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.
மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.
பரிசிழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.
டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கோ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தப்படவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளப்படவோ மாட்டாது.
போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினல் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும்.
வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | ரு | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால்
நான் விரும்புவது:
பெயர்: ____________
விலாசம்: ____________
திகதி ____________
இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்ரு போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

S 220

# தொற்றுநோய்களைத் தடுக்க ஒத்துழைப்பு தாருங்கள்

[வேலணை]

ஒரு தாய் குழந்தையைப் பெற்றால் மட்டும் போதாது. அவர்களை நோயின்றி பேணி வளர்ப்பதில்தான் அவளது பெருமை அடங்கியுள்ளது.

வேலணை செட்டியபுலம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சுகாதார கருத்தரங்கில்கலந்து கொண்ட வேலணை கிழக்குப் பிரிவு மருத்துவமாது செல்வி இ. கே. எட்டு மேற்கண்டவாறு கூறினர்.

மாதர் சங்கத் தலைவி திருமதி பத்மாவதி திருஞானச்செல்வம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் செல்வி எட்டு தொடர்ந்து கூறியதாவது: "இதற்கு எமது சுகாதாரப்பகுதியினரும் தடுப்பு மருந்துகளைக் கொடுத்து நோய்களிலிருந்து குழந்தைகளைகாப்பாற்றி வருகின்றனர். விசேஷமாக போலியோ, தொண்டைக்கரப்பன், குக்கல், ஏற்பு போன்ற நோய்களுக்கும், அம்மை நோயைத் தடுப்பதற்கும் குழந்தைகளுக்குத் தடைமருந்துகளைக் கொடுத்துவருகின்றோம். அதேபோல தாய்மார்களுக்கும் ஏற்பு தடைமருந்துகளையும் கொடுக்கின்றோம்.

இப்பகுதி மக்களிடையே சுகாதாரக்கல்வியைப் புகட்டி உங்களையும் உங்கள் குழந்தைகளையும் சுகதேகிகளாக வளர்ப்பதற்கே நாமும் சுகாதாரப் பகுதியினரும் பாடுபட்டு வருகின்றோம். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனைகளை கேட்டு அதன்படி நடக்க முன்வரவேண்டும்.

தொற்றுநோய்களைத் தடுக்க முக்கியமாக இப்பகுதியிலுள்ள ஒவ்வொருவீட்டிலும் மல சலகூடங்கள் இருப்பது அவசியம்; அத்துடன் உங்கள் பாவனைக்கு கொதித்தாறிய நீரும் பாவித்து வருவீர்களாயின் தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வீர்கள்; இப்பொழுது உங்களுக்கு சுகாதாரக் கல்வியைப் புகட்டுவதற்கென இப்பகுதியிலிருந்து பல பொதுத் தொண்டர்களைத் தெரிந்து எடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்கள்மூலம் இக்கிராமத்தில் இருக்கும் உங்கள் அனைவருக்கும் சுகாதாரக்கல்வியைப் புகட்டுவதுதான் எமது நோக்கம். [ஃ]

## இன்றைய பலன்

ஆவணிமாதம் 5-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(21-8-1979)

**மேடம்:** உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள் கவர்ச்சிகரமான பொருள்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள் திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம்;

**இடபம்:** உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தி புண்டு தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகதினம்;

**மிதுனம்:** கண்துடைப்பு போல நடைபெறும் சாள்நடைகளினால் நஷ்டமுண்டு குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமற்றதாக இருக்காது மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும். மட்டமான தினம்;

**கடகம்:** துன்பத்தின் ரேகைகள் படரும் எதற்கெடுத்தாலும்சீறிவிழுவீர்கள்கொடுக்கல் வாங்கல்மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்;

**சிங்கம்:** பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு சிலருக்கு அதிஷ்டலாபம் கிடைக்கலாம் சிறப்பான தினம்.

**கன்னி:** தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும் கடந்த கால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர் சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

**துலாம்:** வாழ்வில் இன்று வெற்றித் திருநாளாகும் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று வெளியீட்டுத் தொடர்புகளும் சிறப்பைத்தரும்.

**விருச்சிகம்:** இதயத்தில் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகாரச்சிந்தை மேலிடும் நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள் செல்வாக்குப் பெருகும்.

**தனுசு:** தூரத்துப் பயணம் துயரம் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சிதென்படும்; வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு இன்று சிறுவருத்தமாயினும் பெருமுறையில் கவனிக்கவும்;

**மகரம்:** பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை ஏற்படும் சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும் இன்று பொன்னான நாள்.

**கும்பம்:** ஏக்கத்தில் சாயல் தாக்கும் எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ளநேரிடும் உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம் வேண்டும்.

**மீனம்:** வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும் செல்வாக்குப் பெருகும் செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவும் கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## செல்வச்சந்நிதி உற்சவம்

[புலோலி]

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 22ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 31ம் திகதி பூங்காவனமும் அடுத்தமாதம் 5ம் திகதி இரதோற்சவமும், 6ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இரவு உற்சவங்கள், கொடியேற்றத்திலிருந்து 3ம் திருவிழாவரை இரவு 8 மணிக்கும், பூங்காவனத்தன்று இரவு 12 மணிக்கும் 11ம், 12ம், 13ம் திருவிழாக்கள் இரவு 8 மணிக்கும், சப்பறத்திலிருந்து தீர்த்தம் வரை இரவு 2 மணிக்கும் நடைபெறும்.

இவ் உற்சவங்களை முன்னிட்டு போக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதார வசதிகளை அடியார்களுக்கு வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கோரிக்கை

(காரைநகர்)

ஊரி இல்லைச்சுடலை வீதியை திருத்தி மக்களின் போக்குவரத்திற்கு செப்பனிட நிதி ஒதுக்கித்தருமாறு ஊரி கிராம அபிவிருத்திச்சங்கம் வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவை கேட்டுள்ளது.

சி-தோர் சமூக அபிவிருத்திப் பகுதி உத்தியோகத்தர் திரு. ஸ்ரன்ஸ்லஸ் இவ்வீதியின் அவலநிலைபற்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். [ஃ]

## வேலவனை...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மானின் திருவடிகளை அடைவது உறுதியென ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கத்தில் ஆதிசங்கராசாரிய சுவாமிகள் அருளியுள்ளார்கள்.

"ஆறுமுகப் பரம்பொருளை ஞானதேசிகனாகக் கொண்டு சித்தி எல்லாம் பெற்றுச் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவி, உலகுக்குச் சகோதர ஒற்றுமையைப் பற்றி உபதேசித்த அடியார் திருவருட்பிரகாசவள்ளலார் என்னும் ஜோதி ராமலிங்க சுவாமிகள். இப்பெரியார் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இவர் அருளிய திருவருட்பாவைச் சொன்னால் வாய் மணக்கும்; நினைத்தால் உள்ளம் மணக்கும்; உயிரெல்லாம் மணக்கும்; முருகப்பெருமானது திருப்பாதாரவிந்தங்களைத் தியானஞ்செய்தால் இம்மைக்கும் மறுமைக்கும் எண்ணற்ற பலன் உண்டென இவர் உறுதி கூறுகிறார்.


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

லிடோ (யாழ் நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00,
சோபன்பாபு-விஜய லலிதா நடித்த
ரிவோல்வர் ரீட்டா

REGAL (Jaffna) 2nd CROWDED WEEK
Daily 10-30, a. m. 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
THE OMEN
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

ராணி (யாழ். நகர்) கடைசி 2 தினங்கள்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
24-8-79-ந் திகதிவரை மட்டும். எக்காரணங் கொண்டும் மேலும் நீடிக்கப்படமாட்டாது.
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
(கலர்)
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
ரம்ழான் புதிய மறு வெளியீடு
25-8-79 முதல் இருமலர்கள்

2-வது வெற்றி வாரம்
SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00, & 7-30 p m:
The Greatest Family Entertainment of all Times,
Bring the Young ones - They will Like it.
CECIL B. DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
புதிய டெக்னிக் கலர்—தமிழில்
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

SHANTHI JAFFNA Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
The Greatest Sea Adventure In History Has Just Begun!
RICHARD HARRIS—OMAR SHARIF in
"JUGGERNAUT"
Adventure — Suspense — Color
சாதாரணமாகச் சமுத்திரத்தில் நடமாடும் பாரிய கப்பல்களில் நடைபெறும் தாளாந்தச் சம்பவங்கள், விமானத்திலிருந்து பரசூட்டில் இறங்கும் வீரர்கள் அவர்கள் சமுத்திரத்திலிருந்து கப்பல் சிப்பந்திகளால் காப்பாற்றப்படுதல் ஆகிய சாகசங்கள் நிறைந்த படம்.
கொந்தளிக்கும் சமுத்திரத்தில் பிரமாண்டமான 'பிரிட்டானிக்' கப்பலில் நடக்கும் சம்பவங்களை குழு குழு வர்ணத்தில் உங்கள் முழுக் குடும்பத்துடனும் பார்த்து மகிழுங்கள்.
27-8-79 "MR.RICCO" Scope - Color Action-Packed Movie

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
பார் மகளே பார்

வெலிங்டன்
சாவகச்சேரி... (illegible)
ஆலயமணி

வெல்லி
காங்கேசன்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
ஆலயமணி

RIO (Jaffna-TownHall) Phone: 7607
2ND
CAR CRASH WEEK
Daily 4 Shows
DRIVER

ராஜா யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீவித்யா நடித்த
அபூர்வ ராகங்கள்
(புதிய பிரதி)

# 'மக்களின் ஒத்துழைப்பு உதவி எமக்குத் தேவை''

## விளையாட்டுவிழாவில் பொலிஸ் அதிபர்

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் எனது கடமையை சினேகபூர்வமான நல்லெண்ணத்துடன் ஆரம்பித்துள்ளதால், பொதுமக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் உதவியும், எனக்குக் கிடைக்குமென உறுதியாக நம்புகிறேன்.''

இவ்வாறு, யாழ்ப்பாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிபர் திரு. இங்கிலி வீரசூரியா தட்டாதெரு இளைஞர் ஒன்றிய மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியை முடித்து வைக்கும் வைபவத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போது கூறினார் விழாவிற்கு திரு. எஸ். திருநாவுக்கரசு தலைமை வகித்தார். யாழ். பொலிஸ் அதிபர் முதலில் தமிழில் ''வணக்கம்'' [என்று] கூறி உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''பொலிசார் தமது திறமைக்கு ஏற்பபொது மக்களுக்கு உதவியாக சேவை செய்வார்கள். எனவே பொது மக்களும் பொலிசாருக்கு உதவியாக நடக்கவேண்டும். விளையாட்டு என்பது அமைதியையும், ஒருவரை ஒருவர் புரிந்து ஒற்றுமையான சூழ்நிலையைக் கொடுக்கக்கூடியதென்றும். வெற்றிதோல்விகளைப் பொருட்படுத்தாது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடத்திக் கொள்ளக்கூடியது'' என்றார்.

விழாவில் தொழில் அதிபர் திரு. கே. கனகராசா உட்படப் பலர் உரையாற்றினர். [செ]

### வடபகுதி சம்பவங்கள்:

# அத்துலத்முதலிதலைமையில் கமிஷன் நியமனம்

[கொழும்பு]

வடபகுதியில் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனுக்கு வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலி தலைமைவகிப்பார்.

உறுப்பினர்களாக எம். பீக்களான திருவாளர்கள் லொக்குபண்டார, விஜயசிறி எம். சிவசிதம்பரம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவசரகால நிலைமை அமுலாயிருக்கும்போது பொலிசாரின் நடவடிக்கை குறித்து விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த மாதம் 24-ந் திகதி கடிதமூலம் ஜனாதிபதியைக் கோரியதையடுத்து இக்கமிஷன் நியமிக்கப்பட்டது தெரிந்ததே. [ம]

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இன்று 38வது நாள் மண்டலாபிஷேகம் காலை 9 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையும், அதனைத் தொடர்ந்து ''ஐந்தில் அடக்கம் பதினாறு'' என்னும் தலைப்பில் பிரமஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுவார். 6-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் வீதியுலா வருதலும் நடைபெறும். (செ)

## சரண்சிங்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

இடைத்தேர்தலை நடத்துமாறு பிரதமர் சரண்சிங் கோரியபோதிலும், பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களும் எம். பிக்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இடைத்தேர்தலை நடத்தவேண்டாம் என்றும் மாற்று அரசை அமைக்குமாறும் ராஷ்டிரபதியைக் கேட்டுள்ளனர்.

# இதுவரை நடந்த கதை

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் ஜனதா அரசாங்கத்தில் தலைதூக்கிய நெருக்கடி உச்சக்கட்டத்துக்கு வரவே; ஜனதா அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் லோகசபைக்குத் தாக்கல்செய்யப்படுவதற்குசிலமணி நேரத்துக்கு முன்னதாகவே பிரதமர் பதவியை திரு. மொரார்ஜி தேசாய் கடந்த மாதம் 15ந் திகதி ராஜினாமாச் செய்து, நம்பிக்கையில்லாத்தீர்மானம் லோகசபைக்கு வருவதைத் தடுத்துக்கொண்டார். இதனைத் தொடர்ந்து ராஷ்டிரபதியின் கோரிக்கை மீது திரு. மொரார்ஜிதேசாய் காபந்து பிரதமராகக் கடமையாற்றினார்.

இதனைத்தொடர்ந்து அரசைக் கைப்பற்றுவதற்கான பலப்பரீட்சை நடைபெற்றது. இதன் எதிரொலியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு வை. பி. சவான் கடந்த மாதம் 18ந் திகதி அழைத்த இந்திய ராஷ்டிரபதி; புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு அவரைக் கேட்டிருந்தார். ஆனாலும் அரசாங்கம் அமைக்க அவர் தவறியதால், புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான பலத்தை நிரூபிக்குமாறு திரு. மொரார்ஜிதேசாய்க்கும் திரு- சரண்சிங்குக்கும் கடந்த மாதம் 25ந் திகதி இந்திய ராஷ்டிரபதி அழைப்பு விடுத்திருந்தார்.

இரு தலைவர்களும் சமர்ப்பித்த பட்டியல் குழறுபடியாக இருக்கவே, திரு. சரண்சிங்குக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அரசாங்கம் அமைக்குமாறு ராஷ்டிரபதி கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து திரு. சரண்சிங் இந்தியாவின் ஐந்தாவது பிரதமராகக் கடந்த மாதம் 28ந் திகதி பதவியேற்றார்.

''ஜனதா-எஸ்'' கூட்டரசு பதவிக்கு வந்து அந்த மை காய்வதற்குள்ளாகவே சரண்சிங் அரசு மீதான நம்பிக்கைப் பிரேரணையை இந்திய லோகசபையில் சமர்ப்பிக்க வேண்டிய இக்கட்டான நிலை பிரதமருக்கு ஏற்பட்டது. இதன்காரணமாக கடந்த 10ம் திகதி நம்பிக்கைப் பிரேரணைக்கான முன்னறிவித்தலை பிரதமர் சரண்சிங் லோகசபை சபாநாயகரிடம் சமர்ப்பித்தார்.

நேற்று இருபதாம் திகதி, நம்பிக்கை பிரேரணை லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்பும் நேற்று மாலை நடைபெவிருந்தது. ஆனால் எந்த நேரத்தில் நம்பிக்கைப் பிரேரணை இந்திய லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படவிருந்ததோ; அதே நேரத்தில் திரு சரண்சிங் 'திடுதிப்' என்று தமது அமைச்சரவையின் ராஜினாமாவை பாரதராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டியிடம் சமர்ப்பித்துவிட்டார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் விழிப்புலனிழந்த மாணவர்

## யாழ். லயன்ஸ் கழகம் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

விழிப்புலன் இழந்த மாணவனுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஒரு வருட காலத்திற்கான சகல செலவுகளையும் ஏற்க யாழ். லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கடைசி வருட வர்த்தகத்துறை மாணவனாக கல்வி கற்று வந்த வெள்ளையன் சுப்பிரமணியம் [23 வயது] என்ற இம்மாணவன் 78-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் திகதி மாத்தளையில் அவருடைய வீட்டிற்கு சமீபத்தில் ஒருவர் இவருக்கு அசிற் திராவகம் வீசப்பட்டதால் இவர் பார்வையை இழந்தார். பார்வை இழந்த பின்னும் படிக்கவேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தார்.

சுப்பிரமணியத்தின் தந்தை மாத்தளை மாநகரசபையில் வேலை செய்தவரென்றும் அக்குடும்பத்தில் சுப்பிரமணியத்தோடு சேர்த்து ஐந்து பிள்ளைகள் உண்டு என்றும் சுப்பிரமணியமே குடும்பத்தில் சிரேஷ்ட புதல்வர் என்றும் இவரின் முன்னேற்றத்தில் தான் குடும்பமே முன்னேற வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்தில் இவர் கல்வி கற்ற காலத்தில் திறமையாகச் சித்தியடைந்துள்ளார் என்பதும் தெரியவந்தது

சுப்பிரமணியத்தின் கல்வித் தகைமையையும் குடும்ப நிலையையும் அறிந்த யாழ். லயன்ஸ்கழகத் தலைவர் இவருக்கு உதவ முன்வந்துள்ளார்.

யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் யாழ். பல்கலைக்கழகத்தோடும் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை அதிபர் லைன் டேவிட்டுடனும் தொடர்பு கொண்டபோது, லைன் டேவிட் தான் கல்வி கற்பிப்பதற்கான உதவியைச் செய்வதாக உறுதியளித்துள்ளார் என யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ். சபாரத்தினம் தெரிவித்தார் [செ]

## அமரர் என். எம்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது இரங்கலுரையில் ''சத்தியம், நேர்மை உள்ள தொண்டனே; நற்சேவை ஆற்றினாய் நீ'' என்று குறிப்பிட்டிருந்தார்.

''தமக்கும் என். எம். முக்குமிடையே சில விஷயங்களில் கருத்துவேறுபாடுகள நிலவினாலும் தேசியநலன், இறைமை, வசதிகுறைந்தவர்களின் சேமநலம் ஆகிய மூன்று விஷயங்களில் ஒற்றுமை நிலவியது'' என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் முதலில் தமிழிலும் அடுத்து ஆங்கிலத்திலும் வீரஅஞ்சலி செலுத்தியிருந்தார். இவர்களுடன், பலாட்சித்தலைவர்கள், மதகுருமார்கள், ல. ச. ச. கட்சி தலைவர்கள், என். எம். மின் உறவினர்கள் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்

நேற்றிரவு சரியாக 7-08க்கு அமரர் என் எம் மின் சிதைக்கு எம். எம். மின் மருமக்களான கலாநிதி திஸவிதாரண, திரு. சில்வா ஆகிய இருவரும் தீ மூட்டினர்.

தீ ஜுவாலையாக மேலே எழுந்தபோது, அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் 'ஓ' என்று கதறியழுத காட்சி மனதை உருக்குவதாக அமைந்தது

## பூநகரி கொலை: பிணையில் செல்ல அனுமதி

[யாழ்ப்பாணம்]

கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, 13 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தந்தையும், மகனும் கடந்த சனிக்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பிணை மனு மீதான வழக்கில் எதிரிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பூநகரியைச் சேர்ந்த அருணாசலம் என்பவரைக் கொலை செய்ததாகச் சந்தேகநபர்களான அருணாலம், அருணாசலம் ரமேஷ் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பொ. கயிலாசநாதன் ஆஜரானார். (2௨)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு வைத்தியலிங்கம்

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம் மரக்காலை உரிமையாளருமான கார்த்திகேசு வைத்தியலிங்கம் நேற்று 20-8-79ல் காலமாகிவிட்டார். இவர் சிவஞானபூரணியின் அன்புக் கணவரும் திருநிலநாயகி, K V. மகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, சொரூபராணி, தவராணி, கமலராணி, இந்திராணி, சுசீந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கீர்த்திசிங்கம் (முகாமையாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா), சிவராசா (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), கனகரத்தினம் (போர்மன், புகையிரதநிலையம், செட்டிகுளம்) துவாரகன், (உரிமையாளர், தெகிவளை மெடிக்கல் ஸ்ரோர்ஸ்), சண்முகலிங்கம் (உரிமையாளர், Grand Hotel, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிகலா, சந்திரிகா, மோகனதாஸ், மகிந்தன், சாந்தினி, சேனாதிபதி, நரேஷ், நரேந்திரா, உமா, செந்தூரன், சைலேந்திரன், பிரதாயினி ஆகியோரின் அன்பு பாட்டனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 21-8-79 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கோம்படையன் மணல் மயானத்திற்கு 110, பிறவுண் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 3359

# மரண அறிவித்தல்

## ச. அன்னப்பிள்ளை

பன்னாகம் மலேயன் பென்ஷனர் காலம் சென்ற ச. சம்பந்தமூர்த்தியின் மனைவி அன்னப்பிள்ளை காலமானார். இவர் முருகமூர்த்தி (அதிபர், சிதம்பரம் மகாவித்தியாலயம், தெல்தெனியா) பாஸ்கரமூர்த்தி, (சட்ட நிர்மாண நிபுணர், மலேசியா), சிவக்கொழுந்து, சுபலக்சுமி, கமலாதேவி, தவநாம்பிகை (ஆசிரியை, வவுனியா கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராசா (ஆசிரியர், சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை), சகுனமுத்து (ஹாட்வயர் ஸ்டோர்ஸ், அச்சுவேலி) ஆர். சுப்பிரமணியம், (நில அளவைப்பகுதி, பொலநறுவை), அன்னலட்சுமி (ஆசிரியை, யாழ். மத்தியகல்லூரி), உமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (21-8-79) காலை 9-30 மணிக்கு சுழிபுரம் திருவடிநிலையில் நடைபெறும். 3358

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49 Telegeram Eelanadu
T Phon: 389.